87—

ஆரம்ப சுகாதார நிலையம்

***1286—திரு. செ. ஸ்டாலின் குமார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியம், பச்சபெருமாள்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

துறையூர் தொகுதி, பச்சபெருமாள்பட்டிக்கு அருகில் 7 கிலோ மீட்டர் தொலைவில் எரகுடி ஆரம்ப சுகாதார நிலையமும், 11 கிலோ மீட்டர் தொலைவில் உப்பிலியாபுரத்தில் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமும் இருக்கிற காரணத்தால், பச்சபெருமாள்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.*

திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியத்திலுள்ள பச்சபெருமாள்பட்டி, ஆலத்துடையான்பட்டி, ஆங்கியம், அழகாபுரி, சிறுநாவலூர் ஆகிய ஊராட்சிப் பகுதிகளில் வாழும் மக்கள் விவசாயத்தை மட்டுமே சார்ந்து வாழ்ந்து வருகின்றனர். மழைக்காலங்களில் மக்கள் தங்கள் வயல்களில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடும்போது, விஷ வண்டுகளால் பாதிக்கப்பட்டு, உடல்நலக் குறைவு ஏற்படுகிறது. இப்பகுதியில் கொல்லிமலை அடிவாரத்திலுள்ள சுற்றுலாத்தலமான புளியஞ்சோலைக்கு தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் வரக்கூடிய மக்கள் விபத்துக்குள்ளாகின்றனர். விபத்துக்குள்ளானவர்களும், உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களும் சிகிச்சை பெறுவதற்கு*

2019 ஜூலை 11]

போதிய மருத்துவமனை அப்பகுதியில் இல்லாத சூழல் உள்ளது. இந்த ஊராட்சிகளில், அழகாபுரியில் 5,000 மக்கள் தொகையும், ஆங்கியத்தில் 4,500 மக்கள்தொகையும், பச்சபெருமாள்பட்டியில் 9,000 மக்கள்தொகையும், ஆலத்துடையான்பட்டியில் 7,000 மக்கள்தொகையும், சிறுநாவலூரில் 4,000 மக்கள்தொகையும் என மொத்தம் 29,500 மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட எரகுடி கிராமம் 10 கிலோ மீட்டர் தொலைவிலும், பி.மேட்டூர், உப்பிலியாபுரம் பகுதிகள் பச்சபெருமாள்பட்டியிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளன. எனவே, எங்களுடைய விவசாய மக்கள் பயன்பெறுவதற்காக பச்சபெருமாள்பட்டியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதி மலைப் பகுதியாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, சமவெளிப் பகுதியைவிட, மலைப் பகுதிகளுக்கு நாம் விதிமுறைகளைத் தளர்த்தி, மக்கள்தொகை குறைவாக இருப்பினும்கூட அவர்களுக்கு வழங்குவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.*

திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கை. பச்சபெருமாள்பட்டியில் அரசின் விதிமுறைகள் பூர்த்தியாவதால், மக்களின் நலன்கருதி, இங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும். ஏற்கெனவே, 1975 ஆம் ஆண்டிலிருந்து பச்சபெருமாள்பட்டியில் இயங்கிவந்த ஊராட்சி ஒன்றிய மருந்தகம், அதன்பிறகு 1981 ஆம் ஆண்டு முதல் கட்டடம் கட்டப்பட்டு இயங்கி*

வந்தது. அங்கு ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு Pharmacist ஆகியோருடன் ஏற்கெனவே ஊராட்சி ஒன்றியமாக இருந்தபோது மருந்தகம் இயங்கி வந்தது. அதன்பிறகு, 2015 ஆம் ஆண்டு அரசாணை எண் 60-ன்மூலம் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் அனைத்தும், சுகாதாரத் துறையின்கீழ் கொண்டுவரப்பட்டன. அந்த ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தின் கட்டடமும், 5 ஏக்கர் இடமும் அங்கே உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த அவையில், தான் ஒரு விவசாயி என்று அடிக்கடி சொல்லி வருகிறார்கள். விவசாய மக்கள் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துக் கூறி, பச்சபெருமாள்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு முன்வருவாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, ஏற்கெனவே ஊராட்சி ஒன்றியங்கள் சார்பில் நடத்தப்பட்ட மருந்தகங்களை* union dispensary *என்று அழைத்தோம். அவையெல்லாம் உள்ளாட்சித் துறையிடமிருந்து மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் கொண்டுவரப்பட்டு, அவற்றில் எங்கெங்கெல்லாம்* viability *இருக்கிறதோ, அங்கு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அது ஒரு விவசாயப் பகுதி என்றும், ஏற்கெனவே* union dispensary *இருந்தது என்றும், அப்பகுதி மலைப் பகுதி என்றும் பல்வேறு காரண காரியங்களைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அரசு நிச்சயமாக வரும் காலத்தில் நிதிநிலைக்கேற்ப கனிவோடு பரிசீலிக்கும் என்ற சாதகமான பதிலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*